1/12/2010

செ.வெ.எண்: 1056

## கூட்டுறவுத் துறை

தமிழ் நாடு அரசு சட்டமன்ற பேரவை உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில் கூட்டுறவு அருந்தகம் திறப்பு விழா

---

தமிழ் நாடு அரசு சட்டமன்ற பேரவை உறுப்பினர்களின் குடியிருப்பு வளாகத்தில், தலைமைச் செயலக பணியாளர்கள் கூட்டுறவு அருந்தகத்தின் கிளை 1.12.2010 முதல் செயல்பட ஆரம்பித்துள்ளது. 1.12.2010 அன்று நடைபெற்ற இந்த அருந்தக கிளையின் திறப்பு விழாவில் கூட்டுறவு துறையின் சென்னை மண்டல கூடுதல் பதிவாளர் திரு. இரா. ஜெயராமன், அவர்கள், திரு. ந.ச. உமாகாந்தன், துணைப்பதிவாளர்(கடனற்றவை) ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டுறவு அருந்தகம், தரமான உணவுப் பொருட்களை, நியாயமான விலையில் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளதால், விடுதி வளாகத்தில் உள்ள சட்டமன்ற பேரவை உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், பணியாளர்கள், மற்றும் பொதுமக்கள் அனைவரும் பயன்பெறுவார்கள் என கூட்டுறவு அருந்தகத்தின் தனி அலுவலர் திரு.எஸ். ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளர்.

தற்போது இந்த அருந்தகத்தில் வழங்கப்படவிருக்கும் உணவுப் பொருட்களின் விலை விவரத்தையும் தெரிவித்துள்ளார்.

| | | | |
|---|---|---|---|
| 1. | இட்லி(2) | : | ரூ.7.00 |
| 2. | மெதுவடை | : | ரூ.4.00 |
| 3. | மசால் வடை | : | ரூ.4.00 |
| 4. | பொங்கல் | : | ரூ.10.00 |
| 5. | கலவை சாதம் (Variety Rice) | : | ரூ.10.00 |
| 6. | டீ | : | ரூ. 4.00 |
| 7. | காபி | : | ரூ. 5.00 |
| 8. | அளவு சாப்பாடு | : | ரூ.22.00 |

மேலும், தமிழ் நாடு அரசின் புதிய தலைமைச செயலகம் முழுமையாக இயங்கும்போது இந்த அருந்தகம், அனைத்து அரசு அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும், மற்றும் பொதுமக்களுக்கும் தரமான உணவினை, நியாயமான விலையில் வழங்கவும் தயாராக உள்ளது எனவும், இந்த கூட்டுறவு அருந்தகத்திற்கு இடமும், எல்லா வசதிகளும், வழங்கிய தமிழக அரசுக்கு கூட்டுறவுத் துறை சார்பாக, நன்றியை தெரிவிப்பதாகவும், அருந்தக தனி அலுவலர் தெரிவித்துள்ளார்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9